சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலன்– 2011–2012 ஆம் நிதியாண்டு –பார்வைத்திறன் குறைபாடுடைய மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கான 5 ஆரம்பநிலை பயிற்சி மையங்களை தொடர தொடராணை மற்றும் 01–01–2012 முதல் 20 ஆரம்பநிலை பயிற்சி மையங்களை புதியதாக தொடங்குதல் – நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.28 நாள்: 14–03–2012

பங்குனி 1, திருவள்ளுவர் ஆண்டு 2043

படிக்க:

1. அரசாணை(நிலை) எண்.55, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 20–7–2010.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க. எண். 3883 / மா.தி.ந. 2.1/2011, நாள் 19.7.2011.

-------

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 2010–2011ம் நிதியாண்டில், 6 வயதுக்குட்பட்ட பார்வைத்திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையங்களை முதல் கட்டமாக வேலூர், திருவண்ணாமலை, மதுரை, கிருஷ்ணகிரி மற்றும் திருநெல்வேலி ஆகிய ஐந்து மாவட்டங்களில் தகுதியான தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் துவங்குவதற்கென ரூ.19,40,000/– நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தமது கடிதத்தில் பார்வையற்ற குழந்தைகளை ஆரம்பநிலை பயிற்சி மையங்களுக்கு அழைத்துவர பாதுகாவலர்களுக்கு வழங்கப்படும் பயணச் செலவினத்திற்கென தொகை ரூ.20/– போதுமானதாக இல்லை என தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து தற்போது அச்செலவினத் தொகையினை ரூ.40/– ஆக உயர்த்துவதால் ஏற்படும் கூடுதல் செலவினத்தை அனுமதித்து தொடர் செலவினமாக ஒரு மையத்திற்கு ரூ.4,58,000/– வீதம் ஐந்து மையங்களுக்கு ரூ.22,90,000/–மும், 11.7.2011 அன்று மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் திட்டங்களை ஆய்வு செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையற்ற இளஞ்சிறார்களுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையங்களை மேலும் இருபது மாவட்டங்களில் ஏற்படுத்த அனுமதி அளித்ததால், இந்நிதியாண்டில் பார்வையற்ற மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு புதியதாக தொடங்க ஒரு மையத்திற்கு ரூ.5.00 இலட்சம் வீதம் 20 மையங்களுக்கு ரூ.1.00 கோடியும் சேர்த்து ஆக மொத்தம் ரூ.1,22,90,000/– நிதி ஒப்பளிப்பு செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

2011–2012ஆம் ஆண்டிற்கான மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மானியக் கோரிக்கை எண்.52–ன் மீதான விவாதத்தின் போது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் அவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளில் ஏனைய வற்றுடன் பின்வருமாறு அறிவிப்பும் செய்தார்கள்.

" பார்வைத் திறன் குறைபாடுடைய மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்காக 20 மாவட்டங்களில் ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் துவக்கப்படும்".

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று கீழ்கண்டவாறு ஆணையிடுகிறது.

1. பார்வையற்ற குழந்தைகளை ஆரம்பநிலை பயிற்சி மையங்களுக்கு அழைத்து சென்றுவர பாதுகாவலர்களுக்கு வழங்கப்படும் பயணச் செலவினத் தொகையை ரூ.20/– லிருந்து ரூ.40/–(ரூபாய் நாற்பது மட்டும்) ஆக உயர்த்தி வழங்க ஆணையிடுகிறது.

2. 2011–2012 ஆம் நிதியாண்டில் 0–6 வயதுக்குட்பட்ட பார்வைத் திறன் குறைபாடுடைய மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையங்களை தொடர்ந்து செயல்படுத்த ஒரு மையத்திற்கு ரூ.4,58,000/– வீதம் ஐந்து மையங்களுக்கு ரூ.22,90,000/–ஐ(ரூபாய் இருபத்தி இரண்டு இலட்சத்து தொண்ணூறாயிரம் மட்டும்) இவ்வாணையின் இணைப்பு 1–ல் கண்டுள்ளவாறு செலவினம் மேற்கொள்ள நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

3. 01–01–2012 முதல் 0–6 வயதுக்குட்பட்ட பார்வைத் திறன் குறைபாடுடைய மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையங்களை சென்னை, கோயம்பத்தூர், திண்டுக்கல், தேனி, திருச்சிராப்பள்ளி ஈரோடு, கன்னியாகுமரி, நாமக்கல், இராமநாதபுரம், கடலூர், தருமபுரி, காஞ்சிபுரம், கரூர், நாகப்பட்டினம், பெரம்பலூர், சேலம், சிவகங்கை, விருதுநகர், தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் ஆகிய இருபது மாவட்டங்களில் புதியதாக தொடங்க தொடர் மற்றும் தொடராச் செலவினம் சேர்த்து ஒரு மையத்திற்கு ரூ.1,71,500/– வீதம் இருபது மையங்களுக்கு ரூ.34,30,000/–ஐ (ரூபாய் முப்பத்தி நான்கு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) இவ்வாணையின் இணைப்பு 2–ல் கண்டுள்ளவாறு நிதி ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி–3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

2235 சமூகப் பாதுகாப்பும் நலனும்–02 சமூக நலன்–101 மாற்றுத் திறனாளிகள் நலன்–பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்–II மாநிலத் திட்டம்–MS. பார்வைத் திறன் குறைபாடுடைய 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு ஆரம்பநிலை பயிற்சி மையங்கள் தொடங்குதல் 09 உதவித் தொகை–03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை
(த.தொ.கு.2235 02 101 MS-0938)

5. மேலே பத்தி 3—ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்திற்கு 2011—2012 ஆம் நிதியாண்டில் திருத்த வரவு செலவு திட்டத்தில் இத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.16.90 இலட்சம் போக கூடுதலாக தேவைப்படும் நிதி ரூ.40,30,000/— ஆக உள்ளது. இச்செலவினம் ஒரு புது துணைப் பணித் திட்டமாக கருதப்பட வேண்டும். இதற்கு சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இதனை எதிர்நோக்கி, இச்செலவினத்தை முதற்கண் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கான ஆணைகள் நிதி (வ.வெ.பொ.I) துறையிலிருந்து தனியே வெளியிடப்படும். மேலும், இவ்வாணையின் நகலுடன் உரிய விண்ணப்பத்துடன், இம்முன்பணத்தை பெற மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். இச்செலவினத்தை இறுதி துணை மானியக் கோரிக்கை 2011—12ல் சேர்க்கும் பொருட்டு உரிய செயற்குறிப்புகளை தகுந்த நேரத்தில் நிதித் துறைக்கு அனுப்ப மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா. எண். நிதி(சந)/93/DS(VS)/2012, நாள் 13.3.2012.ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.1858(ஆயிரத்து எண்ணூற்று ஐம்பத்து எட்டு)

(ஆளுநரின் ஆணைப்படி)

கண்ணகி பாக்கியநாதன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை—78.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை—5/35.
தலைமைக் கணக்காயர், சென்னை—18/35.
தலைமைக் கணக்காயர், சென்னை—18/35 (பெயரில்)
நகல்:
நிதி (வ.செ. பொதுI/II. சமூக நலம்)த் துறை, சென்னை—9.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முதன்மைச் செயலாளர் (II), சென்னை—9.
அரசு செயலாளர் ( மாற்றுத் திறனாளிகள் நலத் துறை) அவர்களின் தனிச் செயலாளர், சென்னை—9.
மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் அனைத்துப் பிரிவுகள்.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

## இணைப்பு–I

(அரசாணை(நிலை) எண். 28, மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை, நாள் 14–03–2012)

2011–2012 ஆம் ஆண்டில் பார்வைத்திறன் குறைபாடுடைய மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையங்களை தொடர ஏற்படும் செலவின விவரம்.

<u>**தொடர் செலவினம்:**</u> **தொகை ரூ.**

| | |
|---|---|
| இரண்டு சிறப்பு பயிற்றுநருக்கான மதிப்பூதியம் (ரூ.6000 x 2 x 12 மாதங்கள்) | 1,44,000/– |
| ஒரு ஆயாவுக்கான மதிப்பூதியம் (ரூ.1000 x 12 மாதங்கள்) | 12,000/– |
| சில்லரைச் செலவினம் (ரூ.500 x 12 மாதங்கள்) | 6,000/– |
| கட்டிட வாடகை (ரூ.3000 x 12 மாதங்கள்) | 36,000/– |
| பயணச் செலவினம் (ரூ.40/– x 20 (பாதுகாவலர்கள்) x 25 நாட்கள் x 12 மாதங்கள்) | 2,40,000/– |
| விழிப்புணர்வு /குறைபாடுகளைக் கண்டறிதல் / மதிப்பீடு / ஆலோசனை வழங்குதல் | 20,000/– |
| மொத்தம் | 4,58,000/– |

| | |
|---|---|
| ஒரு ஆண்டிற்கு ஒரு மையத்திற்கான செலவினம் | ரூ.4,58,000/– |
| 5 மையங்களுக்கான செலவினம் (ரூ.4,58,000/– x 5) | ரூ.22,90,000/– |

கண்ணகி பாக்கியநாதன்,
அரசுச் செயலாளர்.

// உண்மை நகல்//

பிரிவு அலுவலர்

## இணைப்பு–II

(அரசாணை(நிலை) எண். 28, மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை, நாள் 14–03–2012)

2011–2012 ஆம் ஆண்டில் 01–01–2012 முதல் பார்வைத்திறன் குறைபாடுடைய மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கான 20 ஆரம்பநிலை பயிற்சி மையங்களை புதியதாக துவங்க ஏற்படும் செலவின விவரம்.

<u>தொடர் செலவினம்:</u> (3 மாதங்கள்) தொகை ரூ.

| | |
|---|---|
| இரண்டு சிறப்பு பயிற்றுநருக்கான மதிப்பூதியம் (ரூ.6000/– x 2 x 3மாதங்கள்) | 36,000/– |
| ஒரு ஆயாவுக்கான மதிப்பூதியம் (ரூ.1000/ – x 3 மாதங்கள்) | 3,000/– |
| சில்லரைச் செலவினம் (ரூ.500/– x 3 மாதங்கள்) | 1,500/– |
| கட்டிட வாடகை (ரூ.3000/– x 3 மாதங்கள்) | 9000/– |
| பயணச் செலவினம் (ரூ.40/– x 20 (பாதுகாவலர்கள்) x 25 நாட்கள் x 3 மாதங்கள்) | 60,000/– |
| விழிப்புணர்வு /குறைபாடுகளைக் கண்டறிதல் / மதிப்பீடு / ஆலோசனை வழங்குதல் | 20,000/– |
| மொத்தம் | 1,29,500/– |

**தொடராச் செலவினம்** **தொகை ரூ.**

| | |
|---|---|
| மரச்சாமான்கள் / கல்வி உபகரணங்கள் / கல்வி போதிக்க பயில்வதற்கான உபகரணங்கள் | 42,000/– |

| | |
|---|---|
| **தொடர் செலவினம்** | **1,29,500/–** |
| **தொடராச் செலவினம்** | **42,000/–** |
| **மொத்தம்** | **1,71,500/–** |

| | |
|---|---|
| ஒரு மையத்திற்கான செலவினம் (3 மாதங்களுக்கு மட்டும்) | 1,71,500/– |
| 20 மையங்களுக்கான செலவினம் (3 மாதங்களுக்கு மட்டும்) (ரூ.1,71,500/– x 20) | 34,30,000/– |

கண்ணகி பாக்கியநாதன்,
அரசுச் செயலாளர்.

// உண்மை நகல்//

பிரிவு அலுவலர்